-75-

சுருக்கம்

2013–2014ஆம் நிதி ஆண்டு – நகர கூட்டுறவு வங்கிகளில் உள்ள 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு 2013–2014–ஆம் நிதியாண்டிற்கு தலா ரூ.2,500/–வீதம் பங்கு மூலதனம் – மானியமாக ரூ.250 இலட்சம் வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2)துறை

அரசாணை(நிலை) எண். 121 நாள் 11.07.2013

விஜய வருடம் ஆனி மாதம் 27–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது

1. அரசாணை(நிலை)எண்.94, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2) துறை, நாள் 27.7.2012

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் எண்.ந.க.333636/2012/நவ.2, நாள் 23.4.2013.

----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்கள் 1000 பேருக்கு தலா ரூ.500/– வீதம் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு வட்டியில்லா பங்கு மூலதனக்கடனாக ஆண்டுதோறும் ரூ.5,00,000/– அரசால் அனுமதிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி– II திட்டத்தின் கீழ், நகரக் கூட்டுறவு வங்கிகளின் ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்களுக்கு 2013–14 ஆம் நிதியாண்டிற்கு தலா ரூ.2,500/– வீதம் 1000 உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/– வழங்கும் திட்டத்திற்கு மாநில திட்டக்குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், 2013–2014–ஆம் ஆண்டின் கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின்போது, நகர கூட்டுறவு வங்கிகளில் உள்ள 10,000 ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்குத் தொகை மானியமாக ரூ.2,500/– வீதம், ரூ.2,50,00,000/– நிதி உதவி அளிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் நகரக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெற உரிய பங்குத் தொகை செலுத்துவதில் சிரமப்படுவதால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கு கடன் பெறுவதை ஊக்குவிக்கவும், அதற்கென தேவைப்படும் பங்குத் தொகையினை அரசே ஏற்க அறிவிப்பில் தெரிவித்தபடி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள், அவர்களுக்குத் தேவைப்படும் கடன்களை நகரக் கூட்டுறவு வங்கிகளில் சிரமமின்றி பெற்றுக் கொள்ளவும், அவர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்கவும், கூடுதல் பங்குத் தொகை செலுத்துவது அவசியமாவதால் 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.2,50,00,000/– வழங்க தக்க ஆணைகள் வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலும், மேற்படி நிதி உதவி அளிக்க 2013–14–ஆம் ஆண்டில் வரவு செலவு திட்டத்தில் பகுதி– II திட்டத்தின் கீழ் ரூ.25,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள ரூ.2,25,00,000/– அனுமதித்து ஆணை வழங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசிடம் கோரியுள்ளார்.

5. மேற்படி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று 2013–2014–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ், நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள 1000 ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/– வழங்கும் திட்டத்திற்கு, 2013–14ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ.25,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், 2013–2014ஆம் ஆண்டின் கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் மீதமுள்ள 9000 (10000 – 1000) ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனம் மானியமாக வழங்கும்பொருட்டு, ரூ.2,25,00,000/–யை சேர்த்து, நகரக் கூட்டுறவு வங்கிகளின் 10,000 ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.2,50,00,000/– ( ரூபாய் இரண்டு கோடி ஐம்பது லட்சம் மட்டும் ) கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:–

<u>நிபந்தனைகள்:–</u>

1. இத்தொகை, தொடர்புடைய நகர கூட்டுறவு வங்கிக்கு மட்டுமே அளிக்கப்படும்.
2. அரசு அளிக்கும் பங்குத் தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினரின் பங்கு மூலதன கணக்கில் வரவு வைக்கப்பட்டு உறுப்பினராக தொடர்ந்து இருக்கும் வரையில் வங்கியில் இருந்து வரும்.
3. எந்த காரணத்தை முன்னிட்டும் பங்கு தொகை உறுப்பினருக்கு அளிக்கப்பட மாட்டாது.
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர், வங்கி உறுப்பினர் பொறுப்பில் இருந்து விடுபடும்போது இந்த பங்கு தொகை, இத்திட்டத்தின் கீழ் உதவி பெறாத பிரிதொரு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினரின் பங்கு மூலதன கணக்கிற்கு மாற்றப்படும்.

5. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர் ஒருமுறை மட்டுமே பங்கு மூலதன மானியம் உதவி பெற இயலும்.

மேலும் இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த முன்னேற்ற அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ள வேண்டும்:–

<u>கணக்கு தலைப்பு:</u>

2425–00 கூட்டுறவு – 107 கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – KG நகரக் கூட்டுறவு வங்கிகளின் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனத்திற்கான நிதியுதவியை மானியமாக வழங்குதல் –11 மானியங்கள்– 02 பொதுவான மானியம்
(த.தொ.கு...2425 00 107 KG 1120)

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணித் திட்டம்" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு.I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2013–2014 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (கூ.உ.(ம) நு.பா) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.36434/ நிதி (கூ.உ.(ம) நு.பா)/13, நாள் 11.7.2013–ல் பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.669 (அறுநூற்று அறுபத்தொன்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை–10
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–5
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை) சென்னை–18
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை–104

-78-

..4..

நிதித் (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை / வ.செ.பொ.II)துறை சென்னை—9
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை—9

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை—9
மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
இ.கோ. / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 12/07/2013